உ

சண்முகன் துணை,

பிராமணப்பெண்ணை

துலுக்கனுக்குவித்த

துரோகியின் சிந்து.



சூளை-சுறையாங்குட்டை வீதி

சூவி. முனிசாமிமுதலியாரால்,

சென்னை - சூளை

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

உ

கடவுள் துணை.

பிராமணப் பெண்ணை

துலுக்கனுக்குவிற்ற

துரோகியின்சிந்து.

விநாயகர் துதி - விருத்தம்.

இந்துக்கள்தன்குலத்தில் யின்பனந்தணராய்ப்பிறந்து
பந்தத்தைபாராமல் பாவியவன்—நிந்தனையாய்
துலுக்கனுக்குதன்மகளை தோஷியவன்வித்தகதை
நிகழ்த்தினேன் ஆனைமுகா நில்லு.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்,

பல்லவி.

பாபம்செய்யாதீர் சிருவன்சொல்வாக்கின்மேல்
கோபம்கொள்ளாதீர்

அநுபல்லவி.

பாபமென்றால்பாபம் உத்தமஸ்திரீகளோ
கண்ணீர்விட்டழுதாலே தொலையாக்கொடும்பாபம் (பா)

சரணங்கள்.

பிராமணகுலத்திலே பெண்ணாகஜெனித்தாளே
பெற்றதகப்பனோடு ரெயிலேறிபோனானே
காடிபுருஷன்விடு தேடியேசென்றானே
நல்லவடிவுடனே சொர்ணம்போல்வந்தாளே
மகம்மதிபொருவன் அந்தவண்டியிலேறி
யிருந்தானேசனியன் அப்போ

பிராமணப்பெண்ணின்மேல் பொருக்காமோகங்கொண்டு
பேசும்யிந்துஸ்தானி பாஷையதிலேநின்று
யெண்ணமற்றுமிவன் பணத்தைகொழுப்பைகொண்டு
யிதைப்போல்பெண்கிடைத்தால் கொடுப்பேன்ரூபானூறென்று
சொன்னானேபாவி பிராமணன்கூடவே
சேர்ந்தானேதோஷி அப்போ

ஹிந்துஸ்தானிபாஷை யிவனும்தெரிந்திருக்க
யிந்தபெண்ணையமைததால் யென்னகொடுப்பீர்மருக்க
அந்தமுள்ளபெண்ணே மகளென்றறிந்திருக்க
ஆ ஆ செய்துவைப்பேன் தடையொன்றுமில்லைநிற்க

சொன்னானே அய்யர் பிராமணப்பெண்ணுக்கு
யிள்ளாதேமெய்யன் அப்போ

இஸ்லாமான துலுக்கன் யெடுத்தானேபையையும்
பெண்ணிரெண்டாயிரம் கொடுத்தானேநோட்டையும்
பயமில்லாமல்யாரும் பாக்கியின்மீதியும்
பக்ஷமுடன்தாரேன் அச்சப்படாதேநீரும்

சந்தோஷங்கொண்டான் திருப்பத்தூர்டேஷனில்
வந்துமேநின்றார் பெண்

யென்னசங்கதிக்காக யிங்கேயிருக்கவேண்டும்
யின்பமானநம்மூர் தலவாயிருக்கவேண்டும்
சொந்தவூர்ஸ்டேஷனை கண்டிருக்கவேண்டும்
துரிதமாய்நாமுமே பார்த்துயிருக்கவேணும்

பெண்பிள்ளைபுத்தி கற்புநிலையுடையாய்
யிருப்பதேசித்தி யிங்கே

நமதுசொந்தவேலை நாடியிருக்குதென்றான்
நல்லதோர்பெரியோரால் பொருளுங்கிடைக்குமென்றான்
சொந்தமனிதரையும் பார்த்துபோவோமென்றான்
சூதாகதுலுக்கன்வீ டேகியிலனுமசென்றான்

தகப்பனைபாவி வண்டிமேலேத்தியே
விடுத்தானேகாமி அப்போ

தின்பண்டம்வாங்கியே திரும்பியேவருகின்றேன்
தித்திப்பானபழங்கள் கொண்டுமேதருகிறேன்
அன்புடன்பின்வண்டி அதிலேறிபோகிறேன்
ஆனால்வருமளவும் பதனமாயிருக்குறேன்

வாங்கினான்ரூபாய் ரெண்டாயிரம்பெற்று
நோக்கினான்நேராய் அப்போ

ஜோலார்பேட்டைமார்க்கம் துரிதமாய்சென்றானே
துலுக்கனும்நகைத்தலேலா பூரித்துநின்றானே

காலாகோலமாக பெண்ணைத்தைக்கொண்டானே
கடவுளுமவள்பங்கில் குடியாகின்றாரே

காட்டினுஞ்சிட்டை பிராமணப்பெண்கண்டு
பெத்தாளேபாட்டை இப்போ

தந்தையேமுன்சென்று தலைமரவாளுனே
தனதில்நாலாயிரம் ரூபாயைப்பெற்றானே
உன்னையுமெனக்கவன் விலையாகவிற்றானே
உத்தமன்கைநாட்டை பார்த்துநீகொள்மானே

பெண்டாகவேணும் மெனக்குப்பாரியாளாக
உண்டாகவேணும பெண்ணே

பெற்றதகப்பனென்னை பிரியமாய்வித்தானே
பேதையானமாது பெண்டாயிவிட்டேனே
சுற்றத்தார்காணவே நிக்காசெய்ததின்மேலே
துணையாயிருவருமாய் யிருக்கலாமபுவிமேலே

யிதுவரைபெண்ணு பெண்ணென்றுபாவித்து
உருகியேகொள்ளு சொல்லி

புருஷனைநினைத்துமே பூவையும்பூசித்து
பின்னால்மகம்மதியன் வாயினில்மண்ணிட்டு
பாபரப்பாகவே பெண்ணைமேவிட்டு
பசுந்தமாய்பகவானை மனதிலேதியானித்து

சயனித்துக்கொண்டாள் வெளிபுரமானதனில்
பவனித்துக்கொண்டாள் அப்போ

மறுநாள்நிக்காவென்று மகம்மதியனப்போ
மற்றசாமானெல்லாம் சித்தம்செய்தானப்போ
உருமத்தின் இராத்திரி பணிரெண்டடிக்குதப்போ
உத்தமஸ்திரீமாதும் வெளியேபோனாளப்போ

துணையாகநின்றான் சமையல்காரப்பையன்
யிளையாமல்வந்தான் யிவனை

தண்ணீர்கொண்டுவர தங்காமலனுப்பினாள்
தானுங்கொல்லைச்சுவரை தாண்டபெண்ணுங்கொண்டாள்
நின்றசுவரதுவோ நீண்டிருக்கக்கண்டாள்
நிலையின்மேலகன்றுடி. புதைத்திருக்கின்றாள்

கிழித்தாளே ஆடை கைகாலுக்குசுத்தி
பெரிந்தாளேமேலே அப்போ

ஆடைக்கண்ணாடியில் அழித்தியே பிடித்தாளாம்
அப்புறம்பெண்பாலே சுவரேறிகுதித்தாளாம்
சேயமாங்செட்டியார் பெண்சாதிகண்டாளாம்
சேர்ந்ததந்தையால்வந்த துன்பத்தைசொன்னாளாம்

சிலரைத்தந்தாள் புருஷனுக்குத்தந்தி
கொடுக்கவேசொன்னாள் அப்போ

கோமுட்டிசெட்டியார் கொடுத்ததந்தியாலே
குணமானபுருஷனும் வந்துசேர்ந்தார்பாரே
தாவியேஉத்தமி என்றுபுகழ்வார்மானே
தட்டாமல்முனிசாமி பாடிவைத்தான்தேனே

பாபம்செய்யாதீர் சிறுவன்சொல்வாக்கின்மேல்
கோபம்கொள்ளாதீர்,

தொண்டிச்சிந்து.

பண்ணுலகத்தினிலே நாமும் மானிடஜென்மமெடுக்கரிது-புண்ணியஸ்திரீகளெல்லாம்-கதைகளில்- புகழ்பெறவாசித்தால் மிகப்பெரிதோ கண்ணினால் கண்டதுண்டோ-தமயந்தி-காட்டிலலைந்ததை பார்த்ததுண்டோ-திருவள்ளுவர்பெண்சாதி-கர்ப்பைவாதித்திரோகிகள் சோதித்திரோ-அருந்ததி யென்னுமாது-பிராமணாகள் - அண்டியவர் பேசியே கண்டதுமுண்டோ- யிவளல்லவோ கற்புடையாள்-துலுக்கனை-யேமாத்தினவள் சிமாட்டியும் தந்தனதனதனம்.

என்ன ஆனந்தம்பார் பிந்தக்கள்ளு ஏது ஆனந்தம்பார்

என்ற வர்ணமெட்டு.

என்னவிதிதனைப்பார் அந்தணன்செய்திட்ட
ஏதுமதியிதைப்பார்
யென்னவிதியிது யாரும்செய்யாசதி
தன்பெண்ணைபழிவான ஜாதியில்சேர்க்கவும் (யெ)

தான்பிறந்தசேதி தன்னையறியானோ
தலைவனருள்பெற வெண்ணத்தைக்கொள்ளானோ
யீனமானத்தோடு வாள்ந்துமரிக்கானோ
யிப்படிசெய்திவன் நற்பேர்கிடைக்கானோ (வெ)

பொன்பொருள்பிள்ளையால் வெண்ணுபலன்காணும்
பித்தனருள்பெற்றால் அதினால்சுகந்தோணும
நல்வழிமார்க்கத்தில் நாடினால்வினைதீரும்
நான்முகனெழுதிட்ட வெழுத்தின்வழியேமூளும் (வெ)

அந்தணர்குலத்தினில் தெம்பாகயுதிக்கவும்
அழகுள்ளமாப்பிள்ளை தேடிக்கொடுக்கவும்
பொன்பொருளாசையால் பெண்ணைதான்விற்கவும்
பின்னால்வருத்தங்கொண் டேங்கிப்புலம்பவும் (வெ)

யிரக்குமபொழுதுகாசி அடுத்துவருமோசொல்லும்
யிழிவாகதேடின பணமேயவனைக்கொல்லும்
வருத்தத்தோடுபொருளை சேர்த்தாலேஅதுநில்லும்
வண்மையாய்பொய்யதை மெய்யேயுடனேவெல்லும். (வெ)

ஒருதலைபக்ஷமா யுகந்துநீபேசாதே
உலகில்பொய்சாக்ஷிக்கு அழைத்தாலும்போகாதே
கருத்துடன்யீசனை துதித்திடமறவாதே
கண்டிப்பாய்மோசத்துக் காளாகிநில்லாதே. (வெ)

களுசாராயம்குடித்து துள்ளிவிழுகாதே
கனத்தபொருளைநம்பி மலைத்துநீஎண்ணாதே
வெண்ணுகவெண்ணத்தை வெண்ணியலையாதே
யேழைகளைக்கண்டு மன்ம்நோகப்பேசாதே (வெ)

மானிடசென்மமா யவதரித்தாலென்ன
மறையோராய்பிறந்துமே யுழன்றுதிரிந்தாலென்ன
மூடமதியைகொண்டு பேரைக்கெடுத்தாலென்ன
முனிசாமிவாக்கையும் கேட்டுநடந்தாலென்ன. (வெ)

—o:o—

கும்மி.

கற்புடையஸ்திரீயின் நற்பையுரைத்திட்டேன்
கண்டுமேபெண்கள் நடுநடுங்க
அற்புதமானதோர் யிக்கதைக்கேசையும்
அன்பாய்முடிக்கிறேன் பாருங்கடி. (௧)

ஆனந்தங்கொண்டு நகைத்தாளே-கணவன்
அண்டியேபாதம் தொழுதாளே
மோனத்தேசியீச னவனருளென்றுமே
மேலானயெண்ணத்தைக் கொண்டானே. (௨)

மனைவியைக்கண்டுமே தானகைத்துபுருஷன்
மானாத்துயரத்தை மேலுங்கொண்டு
துலுக்கனைகொண்டுபோய் போலீஸ்முகாந்திரம்
நிருத்தினனென்றுமே சொல்லுங்கடி. (௩)

போலீஸ்முகாந்திரம் வாக்குமூலங்கொண்டு
பின்னால்ஜட்ஜியின் னேர்விசித்து
விதியின்குற்றத்தை தானறிந்துஜட்ஜி
வைத்தார்காவல் யிருவரைத்தான். (௪)

கூட்டங்கணக்கை யெழுதலாமோ-அவரை
குரிப்பிட்டுகண்ணாலும் பார்க்கலாமோ
பார்த்திபன்சண்டையில் வந்துநிறைந்திட்ட
தோற்றமென்றேசொல்லி பாடுங்கடி. (௫)

யிக்கதைக்கொண்டு முடித்தானேருளோ
முனிசாமியென்பேரன் படித்தானே
சக்கரைபோலவே யிக்கதைபாடினன்
சந்தோஷங்கொண்டுமே பாடுங்கடி, (௬)

துரோகியின்சிந்து,

முற்றிற்று.